செ.வெ.எண்.28 நாள்: 17.05.2019

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வாக்கு எண்ணிக்கை பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கான பயிற்சி முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தூத்துக்குடி நாடாளுமன்ற தொகுதி மற்றும் விளாத்திகுளம், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடும் அலுவலர்களுக்கான பயிற்சி முகாம் இன்று (17.05.2019) நடைபெற்றது. இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் கலந்துகொண்டு பேசியதாவது:-

தூத்துக்குடி நாடாளுமன்ற தொகுதி மற்றும் விளாத்திகுளம், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை வ.உ.சி. பொறியியல் கல்லூரியில் 23.05.2019 அன்று காலை நடைபெறவுள்ளது. இப்பணியில் ஈடுபடும் நீங்கள் வாக்கு எண்ணிக்கையின்போது எந்த மாதிரியான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து இன்று பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. வாக்குப்பதிவு எந்திர வாக்குகளை எண்ணுவது, வாக்காளர் ஒப்புகை சீட்டு எந்திர சீட்டுகளை எண்ணுவது, தபால் ஓட்டுகளை எண்ணும் முறைகள் குறித்து தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். நீங்கள் எந்த தொகுதி வாக்கு எண்ணிக்கை மையத்தில் பணியாற்றிடவுள்ளீர்கள் என்பது 23.05.2019 காலை 6 மணிக்குதான் ரேண்டம் முறையில் தெரிய வரும். எனவே நீங்கள் அனைத்து விதமான பணிகள் குறித்து தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டும். வாக்கு எண்ணிக்கை ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளுக்குள் 14 டேபிள்கள் மூலம் நடைபெறும். 19 சுற்றுகள் முதல் 21 சுற்றுகள் வரை எண்ணிக்கை நடைபெறும். ஒவ்வொரு சுற்றும் முடிக்க 30 முதல் 40 நிமிடங்கள் ஆகும். போஸ்டல் ஓட்டுகளின் எண்ணிக்கை முடிந்த பின்புதான் கடைசி சுற்று எண்ணிக்கையை தொடங்கிட வேண்டும். வாக்கு எண்ணிக்கை மையத்திற்குள் செல்போன் எடுத்துவர அனுமதி இல்லை. எனவே யாரும் செல்போன் எடுத்து வரக்கூடாது. முக்கிய பணியான வாக்கு எண்ணிக்கை பணிகளை தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களை பின்பற்றி சிறப்பாக செய்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் வாக்கு எண்ணிக்கை தொடர்பான வீடியோ மூலம் பயிற்சிகள் வழங்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் மு.வீரப்பன், தூத்துக்குடி சார் ஆட்சியர் திரு.சிம்ரான் ஜீத் சிங் கலோன். இ.ஆ.ப., மகளிர் திட்ட அலுவலர் திருமதி.ரேவதி, திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.தனப்ரியா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.கவிதா மற்றும் வாக்கு எண்ணிக்கை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.